[Srimathi Savithri Shanmugham] [4th May 1957

கடைசியாக, மாதர் முன்னேற்றத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று மாதர்கள் முன்னைவிட அதிகமாக முன்னேறி யிருப்பதற்கு இந்த சபையில் நாங்கள் பன்னிரண்டு பெண்கள் அங்கம் வகிப்பதே ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சி யுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆயிரக்கணக்கான பெண் கள் நமது நாட்டிற்குச் சேவை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, பல சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து, நல்லமுறையில் சேவை செய்து வருகிறார்கள். அதேசமயத்தில் மற்றொரு விஷயத்தையும் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். இளம் வயதிலே கணவனை இழந்த பெண்மணி களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் நம்மைப் போல அவர்கள் வாழ்வதற்கு அவர்களுக்கு நல்ல தொழில்களை கற்றுக் கொடுக்கவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அனாதைக் குழந்தைகளுக்கு ஏற்கேனவே பல விடுதிகள் இருக்கின்றன. அந்த விடுதிகள் போதாது என்று நான் கருதுகிறேன். அனாதைக் குழந்தைகள் கவனிப்பார் இல்லாமல் தெருக்களில் திரிந்து கொண்டிருக் கிறார்கள். இன்னும் பல அனாதை விடுதிகளை ஏற்படுத்தி அவர்களை பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கு பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக, எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4 p.m. * SRI M. KARUNANITHI : அவைத் தலைவர் அவர்களே, இன்று மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி நான் போற்றவும் வரவில்லை, தூற்றவும் வரவில்லை; என்னுடைய கருத்துரையை ஆற்றவே வந்திருக்கிறேன். கவர்னர் அவர்களுடைய உரையைப் பற்றி இங்கு நண் பர்கள் அபிப்பிராயம் தெரிவித்த நேரத்தில், எதிர்க் கட்சியினரைப் பற்றி இங்கு பேசப்பட்ட நேரத்தில், குறை கூறுவதையே எதிர்க் கட்சியினர் தொழிலாகக் கொண்டு பேசுகிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டப் பட்டது. குறைகளை எடுத்துச் சொல்லி நிறைபெறுவதற்காகத் தான் சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோமே தவிர, செய்திருக்கிற காரியங்களைப் பன்னிப் பன்னிச் சொல்லி, அவைகளைப் பாராட்டுவதற்காக நாம் இங்கு வரவில்லை. அத்தகைய காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற பாராட்டு விழாக்கள் எல் லாம், வெளியிலே அந்தக் காரியங்களால் பயன் பெறுகிறவர்களால் நடத்தப்படுவது மிகப்பொருத்தமுடையது என்பதை நான் இங்கே குறிப் பிடாமல் இருக்க முடியவில்லை. குறைகளை எடுத்துச் சொல்லி சரி செய்து கொள்வதற்காகவே சட்ட மன்றத்திற்கு வந்திருக்கிறோம்.

அந்தக் காலத்தில் மன்னர்கள், மக்களின் குறைகளைத் தெரிந்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்குவதற்கு இரவு நேரங்களில் "நகர்சோதனை" என்ற பெயரால் மாறுவேடம் தாங்கி, மக்களைச் சந்தித்து, அவர்களுடைய குறைகளை எல்லாம் தெரிந்து, கொலுமண்டபத்தில் உட்கார்ந்து அந்தக் குறைகளைப் போக்கினார்கள் என்று பழைய கால சரித்திரத்திலிருந்து படித்திருக்கிறோம். இது மன்னர்கள் ஆளும் காலம் அல்ல; மக்கள் ஆளுகின்ற காலம். இந்தக் காலத்திலும், அதேபோல் மந்திரிகள் மாறு வேடம் தாங்கி மக்களின் குறைகளைக் கண்டுவரவேண்டுமென்று நான் கோரவில்லை. நாடகத்திலே அனுபவம் பெற்ற நாங்கள் ஒருவேளை ஆளும் கட்சியினராக வந்தால் அந்த வேடங்களைப் போட்டு, மக்களின் குறைகளை கண்டுபிடிக்க முடியும். அந்த அனுபவம் இல்லாத மந்திரிகளை அதைச் செய்யவேண்டுமென்று நான் கோரமாட்டேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர்க் கட்சி ஒன்று தேவையென்பது, எதை எடுத்தாலும் எதிர்த்துப் பேசுவதற்காக அல்ல என்பதை இங்கு பேசிய பலர் சுட்டிக்காட்டினார்கள். ஆளுகின்றவர்கள் யாரைத் துணைக் கொள்ளல் வேண்டுமென்பதைப் பற்றி, வள்ளுவர் பெருமான், தன்னுடைய திருக்குறளில், "பெரியாரைத் துணைக் கோடல்" என்ற அதிகாரத்தில், ஆளுகின்றவர்கள் பெரியாரை தங்களுடைய துணைவராகக் கொள்ளவேண்டுமென்று கூறியிருக்கிறார். எந்தப்

4th May 1957] [Sri M. Karunanithi]

பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்று கூறினுர் என்ருல், எதையும் "சரி, சரி" என்று சொல்லி கண்டிக்காமல் இருக்கின்ற பெரியாரை அல்ல ;

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரி லானும் கெடும்"

என்று வள்ளுவர் குறள் வகுத்திருக்கிருர். சபையிலே ஆளுகின்ற தம்மை இடித்துச் சொல்லுகின்ற பெரியாரைத் துணைவராகக் கொள்ளாத மன்னன் பகைவர்கள் இல்லையாயினும் தன்னைத்தானே கெடுத்துக் கொள்வான், கெட்டுவிடுவான் என்று சொல்லியிருக்கிருர். அந்த முறையிலே இடித்துச் சொல்வதற்காகவே வந்திருக்கிற பெரியார்களுடைய துணையை ஆளுகின்றவர்கள் பெறவேண்டுமென்று வள்ளுவர் அந்தக் காலத்தி லேயே உணர்ந்து சொன்ஞர் போலும்! கவர்னருடைய உரையைப் பற்றி இங்கு பேசிய பல நண்பர்கள் "கன்னியாகுமரியை வரவேற் கிருேம்" என்று கூறியிருக்கிருர்கள். அந்தக் கன்னியாகுமரியை நாம் தேவிகுளக் கரையிலோ அல்லது பீர்மேட்டின் மீதோ நின்று கொண்டு வரவேற்காமல், சிதைந்து போன செங்கோட்டையின் மேல் நின்றுகொண்டு வரவேற்கிருேம் என்று எண்ணும்போது, தேவிகுளம் பீர்மேட்டைப் பெறுவதற்கு வழிவகை காணப்படவில்லை ; கவர்னர் உரை யில்—என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து நில சீர்திருத்த சட்டங்களின் பேரால், நியாய வாரச் சட்டங் 4-10 p.m. களின் பேரால் விவசாயிகள் திருப்தியடைந்து சுமுகமான நிலைமையில் இருக்கிருர்கள் என்று கவர்னர் அவர்களுடைய உரையில் குறிப்பிட்டிருக் கிருர். என்னுடைய குளித்தலை தொகுதியைப் பொறுத்தவரையிலும் திருச்சி மாவட்டத்திலும் இன்றையதினம் இந்த நியாய வாரச் சட்டத்தின் காரணமாகவும் சீர்திருத்தச் சட்டத்தின் காரணமாகவும் எழுந்த வழக்கு உயர் நீதி மன்றம் சென்று அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக மக்களுக்கு வேதனையை உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதை யாரும் மறந்துவிட வில்லை. மறுத்து விடவும் முடியாது. விவசாயிகள் வீடுகளில் தங்களுடைய மனைவி மக்களுடன் வேதனை அடைந்து புழுங்கிக்கொண்டிருக்கிருர்கள், குமுறிக்கொண்டிருக் கிருர்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த நியாய வாரச் சட்டம் காரணமாக குளித்தலைத் தொகுதி நங்கவரம் பகுதியிலும் திம்மாச்சிபுரம் பகுதியிலும் விவசாயிகள் எந்த அளவிற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்பதை தினம் தினம் பத்திரிகை களில் வரும் செய்திகளைக் கண்டும் விவசாயிகள் பகுதியில் எழுப்பப்படும் கூக்குரலைக் கண்டும் எந்த முறையில் அங்கு நிலைமை இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம். திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு கையேரு வாரம் என்றும் மாட்டு வாரம் என்றும் இரண்டு வித வாரம் இருக்கின்றன. இப்படி இரண்டு விதமான வாரம் இருப்பதன் காரணமாக அவர்களுக்கு இந்த நியாய வாரச் சட்டம் பயன்படக்கூடாது என்று கருதி அதை விவசாயிகள் பயன் அடையாத முறையில் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று அங்கு தீர்ப்பு வாங்கி வந்திருக்கிருர்கள். அந்த தீர்ப்பின் காரணமாக விவசாயிகள் நியாய வாரச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும், வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தின் பயனை அடைய முடியாமலும் இருக்கிருர்கள். இன்றையதினம் உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பு அந்த ரீதியில் வழங்கி இருக்கிறது. அதன் காரணமாக மாட்டு வார ஏருக்காரர்கள் என்ருல் யார், கையேருக்காரர்கள் என்ருல் யார் என்ற பிரச்னை எழும்பி அதைப்பற்றி விளக்கத்தை கவனிக்கும்போது தான் நிலைமை தெரிய வருகிறது. மாடும் தந்து அவர்களுடைய சொந்த உழைப்பை சிந்தி நிலம் உடையவர்களிடத்தில் விதை, உரம், ஏரு இவை களைப்பெற்று அப்படிப் பெருகிற அந்தப் பொருள்களுக்காக விளைச்சலில் அவர்கள் தனியாக தானியமாகவோ அல்லது பொருளாகவோ எடுத்துக் கொண்ட பிறகு 60 : 40 என்று பெறவேண்டும் என்று சொல்லப்பட்டா லும் இன்றையதினம் மாட்டு ஏருக்காரர்கள் விவசாயிகள் அல்ல என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதைப்போலவே கையேருக் காரர்கள் யார் என்ருல் அவர்கள் பெரும்பாலும் ஆதிதிராவிடவர்க்கத்தைச்

[Sri M. Karunanithi] [4th May 1957

சேர்ந்தவர்கள், பழங்குடி மக்கள் என்கின்ற பிற்பட்ட மக்கள் பாட்டாளி மக்கள் அப்படிப்பட்ட வர்க்கத்தினருக்காகததான் இந்த நியாய வாரச் சட்டம் செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் அவர்களுக்குகென்று இந்த நியாய வாரச் சட்டத்தையும் நில வெளியேற்றத் தடுப்புச் சட்டத்தையும் கொண்டுவந்தாலும் அவர்கள் அவைகளின் பயனை அடைய முடியாமல் நீதி மன்றம் தீர்ப்பு அளித்து விட்டது. அந்த அடிப்படையிலாவது எந்த அளவிலாவது இந்த நியாய வாரச் சட்டம் அவர்களுக்கு நன்மை வழங்கி இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இப்படிப்பட்ட மாட்டு ஏருக்காரர்களும் கையேருக்காரர்களும் சாகுபடியாளர் கள் அல்ல என்கின்ற தீர்ப்புக்கு இன்று ஆளாகி இருக்கிறார்கள். அதன் மேல் அப்பீல் செய்யப்பட்டு மீண்டும் வழக்கு வரும் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் எடுத்துக்கொள்ளப்போவதாக இருக்கிறது. அதற்குள் விவசாயிகளுடைய நிலைமை என்னவென்றால் முத்து முத்தாக வியர்வை சிந்தி மணி மணியாக நெற்குவியலைத் தந்தவர்கள் களத்துமேட்டிலே காவலர் புடை சூழ அதைக்கொட்டி விட்டு வீட்டிலே வறுமைத்தேள் கொட்டிட வாடிக்கிடக்கிறார்கள். குளித்தலைத்தொகுதியில் இப்பொழுது நிலவி வருகிற, இப்படிப்பட்ட நிலைமையைப் பற்றி கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட மறந்தது வருந்தத்தக்க ஒன்று.

நெருக்கடிக்கு ஆளாகி இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். உயர் நீதி மன்றம் ஜூலை மாதம் மூன்றாவது வாரத்தில் வழ க்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக புதிய ஒரு திருத்த சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அதையும் துரித மாகக் கொண்டு வரவேண்டும். ஏழைத் தொழிலாளர்களுடைய, ஏழை விவசாயிகளுடைய அவல நிலைமையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போகிறது என்பதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் ஒன்றுமே இல்லை என்பதை மிகவும் கவலை கொண்டு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து உணவு பற்றுக்குறை நிலையைப் பற்றியது! கவர்னர் அவர் களுடைய உரையில் உணவு விலை குறையவில்லை என்று குறிப்பிட்டாலும் உணவு விலை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை மறுக்க இயலாது. எங்கு பார்த்தாலும் உணவு விலை விஷம் போல் தினம் தினம் ஏறிக் கொண்டு இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். ஆந்திராவிலுள்ள பெருவாரியான உபரி அரிசி தமிழகத் திற்குப் பயன்படாமல் வட நாட்டில் சோளப் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்குள்ள கோதுமையை கொண்டு வடக்கே சரிக்கட்டுவதற்குப் பதிலாக ஆந்திராவிலுள்ள உபரி யான அரிசியை தமிழ் நாட்டிற்கு பயன்படாத முறையில் எடுத்துச் சென்ற தானது இங்கு விலை வாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. இதைப் பற்றி கவர்னர் அவர்களுடைய உரையில் எந்தவிதமான குறிப்பும் காணப்படவில்லை. இப்படி விலைவாசிகள் உயர்வைத் தடுக்க எப்படிப்பட்ட வழிவகை செய்யப்படும் என்பதும் சொல்லப்படவில்லை.

உணவு நிலைமையை சமாளிப்பதற்கு சர்க்கார் உணவு பெருக்கத்திற்கு திட்டங்கள் செய்யவேண்டும். இந்த சர்க்கார் கையில்லாத ஊமையின் நிலைமையில் தான் இருக்கிறார்கள். தங்களுடைய நிலைமை என்ன என்று சொல்ல முடியாமல் ஊமையாக இருந்து சுட்டிக்காட்டுவதற்கும் கையற்ற முறையில் இருந்துகொண்டிருந்தால் உணவு நிலை பற்றுக்குறை இது போன்றே எப்பொழுதும் நீடித்துக்கொண்டே இருக்கும். இத்தகைய நிலைமை களிலிருந்து திராவிடம் விடுபட்டு திராவிடம் தனித்து, செழித்து நின்று, வளம்பெற, வாழ, நல்ல முறையில் திட்டங்களைத் தீட்ட வேண் டும். அதற்கு குறிப்பாக உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்லு கிறேன். குடகனூர் திட்டம் தேவை என்ற முயற்சி ஒன்று குளித்தலைத் தொகுதியில் 1952-ம் ஆண்டு முதற்கொண்டே இருந்து வருகிறது. அதைப் பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. கனம் முதல் அமைச்சர் அவர்களிடமும், கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களிடமும்,

4th May 1957] [Sri M. Karunanithi]

கனம் மராமத்து அமைச்சர் அவர்களிடமும், கனம் நிதி அமைச்சர் அவர்களிடமும் பல தடவை பல மனுக்கள் மூலமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்குள்ள P.W.D. சூப்ரவைசர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்து துரிதமாக நிறைவேற்றவேண்டும் என்பதை ஆய்ந்து சொல்லியிருக்கிறார். அழகாபுரி என்கிற இடத்தில் ஒரு அணை கட்டினால் அதன் மூலமாக சுமார் பத்தாயிரம் ஏக்கர் புஞ்சை நிலத்தை நஞ்சையாக மாற்றக்கூடிய வசதி இருக்கிறது. அதற்கு 12 லட்சம் ரூபாய் செலவாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது கவனிப்பார் அற்றுக் கிடக்கிறது. இப்படிப் பட்ட நல்ல திட்டங்கள் அலட்சியப்படுத்தப்படுவதைப் பற்றியெல்லாம் கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் சிறிதும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : அநேகம் அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று சொல்வதால் இனிமேல் பேசும் அங்கத்தினர்கள் ஐந்து நிமிடங்களுக்குள் பேசும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Speaker, Sir, it is really 4-18 p.m.
very gratifying to note that His Excellency the Governor was good enough to address the joint session of the Legislature on the 1st May giving out the important features of the State.

(Deputy Speaker in the Chair.)

In his Address, the Governor has appreciated the disciplined manner in which the voters exercised their franchise, the co-operation extended by the different political parties and the efficiency with which the officials conducted the election without any incident. It is very much to be appreciated that the success of the recent general election, which ended without any untoward incident, is mainly due to the co-operation of the people and the officials. Some hon. Members on the Opposite Side complained that the Ministers used their officialdom for the success of the members of their party in the election. If only the Ministers had used the officialdom or sought the co-operation of the officials, the result of the election would have been entirely different. If there had been any one party which exercised a restraining influence and great care in the scrupulous observance of correct principles, it is the Congress Party. So the manner in which the election was conducted should not be opposed for the sake of opposition.

His Excellency the Governor has said that the food position in the State is in a very satisfactory position except in one or two districts. I am sure that with the supplies to be received from the Centre, the Government will be in a position to open as many fair price shops as possible wherever they are necessary so that we can obviate any difficulty in any part of the State.

The Governor has referred to the Second Five-Year Plan and has said that the Government are very much concentrating on the improvement of the condition of the people through the medium of this Plan. I would like to make one submission to the Hon. Minister for Industries and Labour. He should find out the industries that could be started in each district, and start at least one major industry in each district so that we could solve the problem of unemployment both among the educated and the uneducated youngsters. It